சுருக்கம்

மாற்றுத் திறனாளிகள் நலன்– இருகால்கள் பாதிக்கப்பட்ட 1000 மாற்றுத் திறனாளிகளுக்கு இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் வழங்கும் திட்டம்– 2014–15 ம் நிதியாண்டில் தொடர திட்டத் தொடராணை மற்றும் ரூ.5.60 கோடி நிதி ஒப்பளிப்பு செய்வது – ஆணை– வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2.1)த் துறை

அரசாணை(நிலை) எண்.80

நாள்:04–12–2014
ஜய, கார்த்திகை 18,
திருவள்ளுவர் ஆண்டு 2045

படிக்க:–

1. அரசாணை(நிலை) எண்.72, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள்19–07–2013.
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கடிதம் ந.க.எண்.1824/ இவாததி1/2014, நாள் 20.05.2014.

–––––––

**ஆணை:**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், 2013–14 முதல் இரண்டு கால்கள் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் வழங்கும் திட்டத்தின் கீழ், பயனாளிகளின் எண்ணிக்கையை 400லிருந்து 1000 ஆக உயர்த்தியும், இத்திட்டத்திற்கென ரூ.5.50 கோடி நிதி ஒப்பளிப்பு வழங்கியும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேலும் இத்தொகையை முன்பணமாக பெற்றுக் கொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அதிகாரம் வழங்கியும் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டில் காணும் கடிதத்தில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கல்வி பயிலும்/சுயதொழில்/ பணிபுரியும் மாற்றுத் திறனாளிகளின் வாழ்க்கை தரத்தினை உயர்த்த, இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் வழங்க வேண்டியது அவசியம் எனவும், 2014–15 ஆம் நிதியாண்டில் பெட்ரோல் ஸ்கூட்டர்கள் வழங்கக் கோரி 2100 நபர்கள் காத்திருக்கின்றனர் எனவும் தெரிவித்து, இந்நிதியாண்டிலும், இதனை தொடர் திட்டமாக நடைமுறைப்படுத்தி, 1000 எண்ணிக்கையிலான, இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் வாங்குவதற்கென ரூ.5.60 கோடி நிதி ஒதுக்கீடு செய்யுமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மேலும், இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களின் விலை, உத்தேச செலவு தொகையினை காட்டிலும் குறைவாக இருப்பின், அரசின் நிதி ஒப்பளிப்பு வழங்கும் தொகைக்குள், அதிகமான எண்ணிக்கையில் வாங்கி வழங்கவும், உத்தேச செலவினைக் காட்டிலும் வாங்கப்படும் இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களின் விலை

அதிகமாக இருப்பின், அரசின் நிதி ஒப்பளிப்புத் தொகைக்குள் குறைந்த எண்ணிக்கையில் வாங்கி வழங்கவும் அனுமதி அளிக்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலனை செய்த அரசு அதனை ஏற்று பின்வருமாறு ஆணையிடுகிறது:–

i. 2014–2015 ஆம் நிதியாண்டில், இரண்டு கால்களும் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகள் பயன்பெறும் வகையில் வழங்கப்படும் இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் வழங்கும் திட்டத்தினை தொடர, திட்டத் தொடராணையும், இந்நிதியாண்டில் 1000 எண்ணிக்கையில் இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் வாங்கி வழங்கிட ரூ.5.60 கோடி (ரூபாய் ஐந்து கோடியே அறுபது இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

ii. மாற்றுத் திறனாளிகளுக்கான இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள், மாவட்டங்களில் கல்வி பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு முன்னுரிமையிலும், எஞ்சிய இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள், பணிபுரிபவர்கள் மற்றும் சுயதொழில் புரியும் மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கிடவும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

iii. தற்பொழுது மத்திய, மாநில அரசுகளில் பணிபுரிந்து வரும் பணியாளர்களுக்கு பயணப்படி வழங்கப்பட்டு வருவதால், இத்திட்டத்தின் கீழ் இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள், பயணப்படி பெறும் மாற்றுத் திறனாளி பணியாளர்களுக்கு வழங்க தேவையில்லை என அறிவுறுத்தப்படுகிறது.

iv. இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களை, தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000ன்படி, திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி மூலம் வாங்கி வழங்கவும், இச்செலவினத்தை மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அரசு அதிகாரமளிக்கிறது.

v. இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களின் விலை, உத்தேச செலவு தொகையினை காட்டிலும் குறைவாக இருப்பின், அரசின் நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ள தொகைக்குள் அதிக எண்ணிக்கையில் வாங்கி வழங்கவும், உத்தேச செலவினைக் காட்டிலும், வாங்கப்படும் இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களின் விலை அதிகமாக இருப்பின், அரசின் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ள தொகைக்குள் குறைவான எண்ணிக்கையில் வாங்கி வழங்கப்பட வேண்டும்.

5. மேலே பத்தி 4(i)ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

"2235–சமூக பாதுகாப்பும் நலனும்– 02 சமூக நலன் –101 – மாற்றுத் திறனாளிகள் நலன்–I திட்டத்தில் சேராதது CO மாற்றுத் திறனாளிகளுக்கான மறுவாழ்வுத் திட்டம் –19 இயந்திரமும் சாதனமும் 01 வாங்குதல்".

(த.தொ.கு 2235–02–101–CO-1917)

6. மேலே பத்தி 4(i)–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையில், கூடுதலாக தேவைப்படும் ரூ.3.60 கோடி 2014–15 ம் ஆண்டிற்கான திருத்திய / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். அவ்வாறு வழங்குவதை எதிர்நோக்கி இச்செலவித்தை மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்களுக்கு அதிகாரம் அளித்து ஆணையிடப்படுகின்றது. மேற்படி செலவினம் குறித்து சட்டப் பேரவையின் கவனத்திற்கு கொண்டு வரும் பொருட்டு, 2014–15 ம் ஆண்டிற்கான துணை மதிப்பீட்டில் (Supplementary Estimates) குறிப்பிட்டு சேர்த்திடல் வேண்டும். 2014–15 ம் ஆண்டிற்கான திருத்திய / இறுதி திருத்திய நிதியொதுக்கத்திற்கான கருத்துருவை நிதித் துறைக்கு அனுப்பிடும் பொழுது மேற்காணும் செலவினத்தையும் தவறாமல் சேர்த்து அனுப்பிடுமாறும், மேலும் இச்செலவினத்தை துணை மதிப்பீட்டில் சேர்த்திடும் பொருட்டு தேவையான விளக்கக் குறிப்பினையும் நிதி(வரவு செலவு பொது–I) துறைக்கு அனுப்புமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வாணை நிதித்துறையின் அ.சா. எண்.65102/நிதி(சந)/2014, நாள்3.12.2014–ன் ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.1683 (ஆயிரத்து அறுநூற்று எண்பத்து மூன்று)

(ஆளுநரின் ஆணைப்படி)

பொ. சிவசங்கரன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் /அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–35.
தலைமைக் கணக்காயர், சென்னை–18.
தலைமைக் கணக்காயர், சென்னை– 18. (பெயரில்)

**நகல்:-**
நிதி (சந/வ.செ. பொது. I/II) துறை, சென்னை–9.
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலாளர் சென்னை–9.
முதன்மைச் செயலாளர் (மா.திந. துறை) அவர்களின் தனிச் செயலாளர்,சென்னை–9.
இ. கோ/உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.